**Media:** Tamil Murasu
**Date:** 10 March 2023
**Page:** 4

# உடற்குறை உள்ளவர்களின் பராமரிப்பாளர்களுக்குக் கூடுதல் உதவி

ஓர் உடல்குறைபாடாவது உள்ளவர்களை கவனித்துக்கொள்ளும் வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பராமரிப்பாளர்கள் கூடுதல் உதவி பெறவுள்ளனர். அதன் பொருட்டு, இல்லப் பராமரிப்பு உதவித் தொகை முந்தைய $200இருந்து $400ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

மார்ச் 1ஆம் தேதி இது நடப்புக்கு வந்தது. அதிகபட்சம் $1,200 மாதாந்திரக் குடும்ப வருவாய் உள்ள, அல்லது வீட்டின் ஆண்டு மதிப்பு $13,000க்கும் குறைவாக உள்ள வருவாய் இல்லாதப் பயனாளிகளுக்கான உதவித் தொகை இரட்டிப்பாகி உள்ளது. மேலும், $1,201க்கும் $2,800க்கும் இடைப்பட்ட மாதாந்திரக் குடும்ப வருவாய் உள்ளவர்களுக்கான உதவித் தொகை, $200இருந்து $250ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

ஃபேஸ்புக்கில் அது பற்றி நேற்று பதிவிட்ட சுகாதார, சட்ட அமைச்சுகளுக்கான மூத்த நாடாளுமன்றச் செயலாளர் ரஹாயு மஹ்ஸம், வசதி குறைந்த குடும்பங்களுக்கான உதவியை அதிகரிக்கும் முயற்சிகளில் அதுவும் ஒன்று எனக் கூறினார்.

“பராமரிப்பு, எளிதான பயணம் அல்ல. மகளிர் மேம்பாட்டுக்கான உரையாடல்களில் பல பெண்கள் தங்கள் கதைகளையும் தியாகங்களையும் வெளிப்படையாகப் பகிர்ந்துகொண்டனர். இந்நடவடிக்கை, பராமரிப்பாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் மீதான பாரத்தைக் குறைக உதவும் என்று நம்புகிறோம்,” என்றார் திருவாட்டி ரஹாயு. இல்லப் பராமரிப்பு உதவித்தொகை 2019 அக்டோபரில் தொடங்கப்பட்டது.

Source: Tamil Murasu @SPH Media Limited. Permission required for reproduction.